சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை - 08

நகஎண் 3457 /அ5 / 2023 நாள் 8.05.2023

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக்கல்வி - சென்னை மாவட்டம் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு மார்ச்/ஏப்ரல் 2023 - விடைத்தாளின் நகல் /மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தல் - பள்ளி மாணவர்கள் தாம் பயின்ற பள்ளிகள் மூலமாகவும் தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் மூலமாகவும் இணையதளத்தில் விண்ணப்பித்தல் – மாணவர்களுக்கு அறிவுறுத்தி பள்ளித்தலைமையாசிரியர்களுக்கு - தெரிவித்தல் - தொடர்பாக |
| பார்வை | சென்னை – 06 அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித நக.எண் 023720/சி1/2023 நாள் 8.05.2023 |

பார்வையின் காணும் அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடிதம் இத்துடன் இணைத்து அனைத்து வகைப் பள்ளித்தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு அனுப்பப்படுகின்றன. மார்ச் / ஏப்ரல் 2023 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுதிய தேர்வர்களின் தேர்வு முடிவுகள் 08.05.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது,

இதனை தொடர்ந்து தங்கள் பள்ளி மாணாக்கர் மற்றும் தங்கள் தேர்வு மையத்தில் தனித்தேர்வர்களாகத் தேர்வெழுதியோர் விடைத்தாள் நகல் கோரியோ அல்லது மதிப்பெண் மறுகூட்டல் கோரியோ விண்ணப்பிக்க விரும்பினால் 09.05.02023 ( செவ்வாய்கிழமை) காலை 11 மணி முதல் 13./05.2023 ( சனிக்கிழமை) மாலை 5.00 வரை விண்ணப்பிக்கலாம் என அரசுத்தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது,

விண்ணப்பங்களை பதிவு செய்ய விரும்பும் பள்ளி மாணாக்கர்கள் தாங்கள் பயின்ற பள்ளி வழியாகவும் தனித்தேர்வர்கள் அவர்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வாயிலாகவும் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது,

எனவே அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள User Id மற்றும் Pass word பயன் படுத்தி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுரை பின்பற்றி மாணவர்களின் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யுமாறு அனைத்து பள்ளித்தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

இணைப்பு அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடிதம்

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1அனைத்து பள்ளித்தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள் சென்னை மாவட்டம்

நகல்

2 அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் ( இடைநிலை)( தனியார்பள்ளிகள்) (தொடக்கக்கல்வி) சென்னை மாவட்டம் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது

Scanned with OKEN Scanner